DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/22 Deposition of Witness for : P.W. 12**

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் ஹரீஸ்பிரபு | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 17 ஆக காட்டப்பட்டு அசா 12 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது தாராபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் உள்ளேன். 16.10.2021 அன்று காலை 6 மணிக்கு நான் அலுவல் மருத்துவராக பணியில் இருந்தபோது சுப்ரமணி வயது 31 த/பெ.முருகன் சிக்கனாபுரம் தண்ணீர்பந்தல் சேர்ந்தவர் சிகிச்சைக்காக சேர்ந்தார். மேற்படி சுப்ரமணியை நான் பரிசோதித்தபோது இடது பக்க முன் தலையில் 2X2 செமீ அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது. மேலும் அவர் சுய நினைவின்றி இருந்தார் அவருக்கு தேவையான முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவரை மேல் சிகிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகல் ஒப்படைக்கிறேன். அது அசாஆ.5. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

நான் மேற்படி நோயாளியின் காயத்தை நேரடியாக பார்த்து ஆய்வு செய்தேனா என்றால் ஆமாம். நான் பார்த்த காயத்தை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். நான் எழுதியுள்ளது போல் தான் காயம் இருந்ததா என்றால் ஆமாம். விபத்து பதிவேட்டில் சிகிச்சைக்கு வந்த நபர் குடிபோதையில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் விபத்து பதிவேட்டில் 16.10.2021 என்று எழுத ஆரம்பித்து அடித்துள்ளேன் என்றால் ஆமாம். அதற்கு காரணம் தகவல் சொன்னவர்கள் தடுமாறி சொன்னதால் என்றால் ஆமாம். அந்த நபருடன் 5, 6 நபர்கள் உடன் வந்தார்களா என்றால் ஆமாம். ஒரு நபரை மட்டும் உள்ளே அனுமதித்தேன். அவருக்கு சரியாக சொல்ல தெரியவில்லை. என்னிடம் சொல்லும் போது வந்த நபர் தெரியவில்லை என்று சொன்னார். போலீஸ் இன்டிமேசன் நான்தான் கொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த இன்டிமேசனில் ஆர்டிஏ என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வந்தவர்கள் சொன்ன அடிப்படையில் தான் அவ்வாறு எழுதியுள்ளேன் என்றால் ஆமாம். அவர் தெரியாது என்று சொன்னதால் பொதுவாக அவ்வாறு இருக்கலாம் என்று எழுதினேன். அந்த காயம் வாகனத்தில் இருந்து விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் இருக்கலாம். நான் பார்த்தபோது வீக்கம் மட்டுமே இருந்தது.

மறுவிசாரணை அரசு தரப்பில்

( அரசு தரப்பு வழக்கறிஞர் வழக்கு கோப்பில் உள்ள இன்டிமேசன் குறியீடு செய்யப்படாமல் விடுபட்டுள்ளது மேற்படி இன்டிமேசனை எழுதியது இந்த மருத்துவர் என்பதால் இன்றைய தினமே குறியீடு செய்வதற்கு விசாரிப்பதற்கு அனுமதி வேண்டும் என்று கோரி அனுமதி அளிக்கப்பட்டது)

என்னிடம் காட்டப்படும் இன்டிமேசன் அசாஆ.12 ஆகும்.

மறு குறுக்கு விசாரணை

இல்லை.

ஒப்பம் எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 37/22 Deposition of Witness for : P.W. 13**

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் சந்திரமோகன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 18 ஆக காட்டப்பட்டு அசா 13 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது ஈரோடு அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் நரம்பியல் துறையில் மருத்துவராக பணியில் உள்ளேன். 16.10.2021 அன்று கோவை அரசு மருத்துவமனையில் நரம்பியல் துறையில் பணியில் இருந்தபோது காலை 8.37 மணிக்கு சுப்ரமணி வயது 31 த/பெ.முருகன் சிக்கனாபுரம் தண்ணீர்பந்தல் சேர்ந்தவர் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டார். மேற்படி சுப்ரமணியை நான் பரிசோதித்தபோது இடது பக்க முன் தலையில் 2X2 செமீ அளவில் வீக்கக்காயம் மற்றும் தையல் இடப்பட்ட சிதைந்த காயம் காணப்பட்டது. அது குறித்து நான் சிகிச்சை அளித்தேன். 19.10.2021 காலை 8.45 மணிக்கு சிகிச்சை பலனின்றி சுப்ரமணி இறந்து விட்டார். என்னிடம் காட்டப்படும் சாபொ.1 கத்தி மூலம் மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு

உள்ளது. நான் அனுப்பிய டெத் இன்டிமேசன் அசாஆ.6. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

அசாஆ.6 ல் வாகன விபத்து என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். விபத்து நடந்த இடம் தளவாய்பட்டினம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சிதைந்த காயம் என்பது ஒழுங்கற்ற ஒரு பொருளின் மீது தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஆமாம். கத்தி போன்ற பொருளில் சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல வரலாம். சாபொ 1 கத்தியை இப்போது தான் பார்க்கிறேன் என்றால் சரிதான். நான் நோயாளிக்கு சிகிச்சை அளித்தேனா என்றால் ஆமாம்.அறுவை சிகிச்சை நாங்கள் ஒரு குழுவாக செய்தோம். அதன் அடிப்படையில் தான் காயத்தின் தன்மை சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம் மேற்சொன்ன காயம் வாகன விபத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் இருக்கலாம்.

ஒப்பம் எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/22 Deposition of Witness for : P.W. 14**

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் பேரானந்தம் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 19 ஆக காட்டப்பட்டு அசா 14 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம்சார்ந்த மருத்துவதுறையில் மூத்த உதவி பேராசிரியராக பணியில் உள்ளேன். 19.10.2021 அன்று கோவை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அலங்கியம் காநிகுஎண்.604/2021 வழக்கில் சம்பந்தப்பட்ட சுப்ரமணி வயது 31 த/பெ.முருகன் சிக்கனாபுரம் தண்ணீர்பந்தல் சேர்ந்த பிரேதத்தை காவலர் ஐய்யனார் என்பவர் மூலம் ஆய்வாளர் கோரிக்கை கடிதத்துடன் பிரேத பரிசோதனைக்காக என்னிடம் சமர்ப்பித்தார். மேற்படி ஆய்வாளர் கோரிக்கை கடிதம் அசாஆ.7.

அன்றைய தினமே மாலை 4.25 மணியளவில் பிரேத பரிசோதனை துவக்கினேன். பிரேத பரிசோதனையில் பிரேத்தின் மேற்புற பகுதி விறைப்பு

தன்மையுடன் காணப்பட்டது. பிரேதத்தின் கை கால் நகங்கள் வெளிறி காணப்பட்டது. பிரேதத்தின் மீது காணப்பட்ட இறப்பிற்கு முன்பான காயங்கள் பின்வருமாறு:–

1. மருத்துவ சிகிச்சையின் போது தையல் இடப்பட்ட காயம் 22 செமீ அளவில் இடது பக்க தலையில் காணப்பட்டது.

2. கிடைமட்டமான தையல்இடபட்ட குத்துகாயம் 2 X .05 செமீ கபால குழியின் ஆழம் அளவில் இடது பக்கவாட்டு மண்டை பகுதியில் காணப்பட்டது. அந்த காயத்தின் வெளிமுனை மழுங்கியும் உள்முனை கூராகவும் காணப்பட்டது. காயத்தை ஆய்வு செய்ததில் காயம் உள்நோக்கியும் பின்நோக்கியும் அதன் அடிப்புற கபால எலும்பை துளைத்து மூளைச்சவ்வுகளை துளைத்து காணப்பட்டது. மண்டைதோலின் அடிப்புறத்தில் இடது முன் மண்டை பகுதியில் 2 X 1 செமீ அளவில் கன்றிய காயம் பல்வேறு நிறங்களில் காணப்பட்டது. அறுவை சிகிச்சையினால் கபாலத்தின் இடது பக்கவாட்டு மற்றும் மேற்புற பகுதியில் இருந்த எலும்பு 14 X 12 செமீ அளவில் அகற்றப்பட்டு காணப்பட்டது. மூளையின் வெளிபுற சவ்வின் வெளியே 10 X 6 செமீ அளவில் ரத்தக்கசிவு காணப்பட்டது. மூளையின் உட்புற சவ்வின் மற்றும் வெளிப்புற சவ்வின் இடையே இடது மூளையை சுற்றிலும் ரத்தக்கசிவு காணப்பட்டது.

<u>இதர தடயங்கள்</u> – மார்பு மற்றும் வயிற்று அறை காலியாக காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக காணப்பட்டது. இரைப்பையில் 250 மிலி அளவில் ஆன பச்சை நிற திரவம் எவ்வித நெடியும் இன்றி காணப்பட்டது. உடல் உள்உறுப்புகள் வெளிறி காணப்பட்டன. உடல் உள்உறுப்புகள் ரசாயான பகுப்பாய்வுக்கிற்கும் ரத்தம் பகுப்பாய்விற்கும் சேகரித்து வைக்கப்பட்டது.

கருத்துரையில் இறந்தவர் அவரது தலையில் ஏற்பட்ட குத்துக்காயத்தின் விளைவாக இறந்துள்ளார் எனக் கூறி பிரேத

பரிசோதனை அறிக்கை வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.8. உடல் உள் உறுப்பு சம்பந்தமான ரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டதில் அதில் எவ்வித விசத்தன்மையும் இல்லை என பெறப்பட்டது. அந்த அறிக்கை ஒப்படைக்கிறேன். அது அசாஆ.9. ரத்தமாதிரி அறிக்கை பெறப்பட்டது. அதில் ரத்தம் வகை பி வகையை சார்ந்தது என இருந்தது. அந்த அறிக்கை அசாஆ.10. என் இறுதி கருத்துரையில் இறப்பிற்கான காரணம் ஏற்கனவே பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது என தெரிவித்துள்ளேன். இறுதி அறிக்கை அசாஆ.11. என்னிடம் காட்டப்படும் சாபொ.1 கத்தியால் மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இறந்த நபருக்கு Craniotomy அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் ஆமாம். அறுவை சிகிச்சை செய்தபோது மண்டையோட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதி அகற்றப்பட்டது என்றால் ஆமாம். குத்துகாயத்தினால் வெளியேறிய ரத்தத்தை கட்டுப்படுத்த தான் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஏதாவது ஒரு பொருளினால் குத்துக்காயம் ஏற்படுத்தப்படும்போது அந்த பொருளில் ஒட்டியிருக்கும் தூசிகள் அழுக்குகள் காயத்தின் உள்ளே காணப்படும் என்றால் இருந்தால் இருக்கும் வெளிப்புறதோலிலும் நின்று விடலாம். காயத்தை சுத்தப்படுத்தி தான் மருத்துவம் பார்க்கப்படும் என்றால் ஆமாம். மேற்படி காயத்தை பஞ்சினாலும் சுத்தப்படுத்துவார்கள் அல்லது திரவத்தினாலும் சுத்தம் செய்யப்படும். இது எவ்வாறு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. முதலில் வெளிபுறகாயங்களை பதிவு செய்துவிட்டு தான் காயத்தை

திறப்போம் என்றால் ஆமாம். 2 வது வெளிபுற காயம் தையல் இடப்பட்டது என்றால் ஆமாம். காயத்தின் வெளிப்புற தன்மையை பார்த்த வகையில் சொல்லமுடியாது என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான்கு நாட்கள் கழித்து காயத்தின் தன்மை குறித்து நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் சாலை விபத்து என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அப்படி தான் உள்ளது. டெத் இன்டிமேசனிலும் அவ்வாறு தான் உள்ளது என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் இருப்பதை எழுதியுள்ளார்கள். ஆய்வாளர் கோரிக்கையில் கத்திகுத்து என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். அதன் அடிப்படையில் காயத்தின் தன்மை குறித்து நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு நபர் தவறி கூர்மையான ஒரு பொருளில் விழும்போது மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் காயத்தின் அளவு , திசை, ஆழத்தை பொறுத்து வாய்ப்பில்லை. போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாபொ.1 கத்தி முதன்முறையாக நீதிமன்றத்தில் தான் காட்டப்பட்டது என்றால் இதற்கு முன்னர் காண்பித்தார்களா என்று நினைவில்லை. வாகன விபத்தல் ஏற்பட்ட காயத்தை போலீசார் தெரிவித்தன் அடிப்படையில் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன காயத்தின் தன்மை மருத்துவ சிகிச்சை அளிக்கும்போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை. அறுவை சிகிச்சை செய்த பிறகு ஏற்கனவே இருந்த காயத்தின் தன்மை மாறுப்பட வாய்ப்பு உள்ளது என்றால் இந்த வழக்கில் அவ்வாறு இல்லை. அறுவை சிகிச்சை செய்த போது அந்த பகுதியில் உள்ள திசுக்கள் வெட்டி எடுக்கப்பட்டது என்றால் இந்த வழக்கில் இல்லை. நான் முழுக்க முழுக்க போலீசாருக்கு சாதகமாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூளை அறுவை சிகிச்சை செய்து காயத்திற்கு சிகிச்சை அளித்தபோது அந்த காயத்தின் அமைப்புகள் நீளஅகலங்கள் நிச்சயமாக மாறுபடும் என்றால் நான் பரிசோதித்த இந்த வழக்கில் அவ்வாறு இல்லை.

ஒப்பம் எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/22** **Deposition of Witness for : P.W. 15**

| | | | |
|---|---|---|---|
| Name | : நவநீதகிருஸ்ணன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 21 ஆக காட்டப்பட்டு அசா 15 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது தாராபுரம் போக்குவரத்து காவல்நிலையத்தில் முதுநிலை காவலராக அயல் பணியில் உள்ளேன். கடந்த 19.10.2021 ம் தேதி அலங்கியம் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது அலங்கியம் காநிகுஎண் 604/2021 வழக்கின் ஆய்வாளர் வழங்கிய சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை பெற்று துரித தபால் மூலம் தாராபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்தற்காக சென்றேன். அந்த சமயத்தில் பல்லடம் குற்றவியல் நடுவர் பொறுப்பு நடுவராக இருந்ததால் பல்லடம் சென்று மேற்படி தபாலை ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

இல்லை.

ஒப்பம் எஸ்.நாகராஜன்
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/22 Deposition of Witness for : P.W. 16**

| | | | |
|---|---|---|---|
| Name | : அய்யனார் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 22 ஆக காட்டப்பட்டு அசா 16 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது அலங்கியம் காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 19.10.2021 ம் தேதி அலங்கியம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது அலங்கியம் காநிகுஎண் 604/2021 வழக்கின் ஆய்வாளர் அவர்கள் இறந்து போன சுப்ரமணி என்கிற பாலசுப்ரமணி என்கிற நபரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதமும் பிரேத்தையும் பெற்று கோவை அரசு மருத்துவமனையில் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடித்த பிறகு இறந்தவரின் உள்உறுப்புகளை பகுப்பாய்வு செய்வதற்கு கோவை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ரத்தமாதிரியும் மருத்துவரால் கொடுக்கப்பட்டு தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடித்த பிறகு பிரேத்தில் இருந்து

வெட்டி எடுக்கப்பட்ட சிவப்பு நிற பார்டர் போட்ட வெள்ளை வேட்டி ஒன்றை ஒப்படைத்தார் அதை நான் தனி அறிக்கை தயார் செய்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அந்த தனிஅறிக்கை அசாஆ.13. படிவம் 91 மூலம் ஆய்வளார் அதை கைப்பற்றினார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த படிவம் 91 அசாஆ.14. என்னிடம் காட்டப்படும் சிவப்பு நிற பார்டர் போட்ட வெள்ளைவேட்டி நான் ஒப்படைத்தது தான். அது சாபொ.2 ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

இல்லை.

ஒப்பம் எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 37/22 Deposition of Witness for : P.W. 17**

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவசுப்ரமணியன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27.03.2023

**All Accused present.**

முதல் விசாரணை

(சாட்சி பட்டியல் படி LW 23 ஆக காட்டப்பட்டு அசா 17 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது குண்டடம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 16.10.2021 ம் தேதி அலங்கியம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்று 21.10 மணிக்கு தாராபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து தாராபுரம் காவல்நிலையம் மூலமாக கிடைக்கப்பெற்ற தகவல் படி சுப்ரமணி வயது 31 த/பெ.முருகன் சிக்கனாபுரம், தண்ணீர் பந்தல் தளவாய்பட்டினம் என்பவரை பொறுத்து பெற்று விசாரணையில் இருந்தபோது மறுநாள் 17.10.2021 அன்று 14 மணிக்கு மீனாட்சி வயது 40 க/பெ.முருகேசன் கிழக்கு தெரு சிக்கனாபுரம் தண்ணீர் பந்தலை சேர்ந்த நபர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரைப் பெற்று நிகுஎண்.604/2021 சட்டப்பிரிவு

294(பி), 307 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.15 ஆகும். அதன்படி ஒரு நகலை ஆய்வாளர் விசாரணைக்காகவும், அசலை புகாருடன் இணைத்து குற்றவியல் நீதித்துறை நடுவர் தாராபுரம் அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் அலங்கியம் காவல்நிலைய பொறுப்பு அதிகாரியாக நான்தான் இருந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் 5 காவலர்கள் இருந்தார்கள். அன்றைய தினம் மூலனூர் காவல்நிலைய ஆய்வாளர் தான் பொறுப்பு ஆய்வாளராக தாராபுரத்தை கவனித்தார் என்றால் சரிதான். மூலனூர் காவல்நிலையத்திலிருந்து அலங்கியம் காவல்நிலையம் சுமார் 35 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அலங்கியம் காவல்நிலையத்திலிருந்து தாராபுரம் குற்றவியல் நீதிமன்றம் சுமார் 10 கிமீ தூரம் உள்ளது என்றால் சரிதான். மூலனூர் காவல் ஆய்வாளரிடம் எத்தனை மணிக்கு கோப்புகளை ஒப்படைத்தேன் என்றால் முதல் தகவல்அறிக்கை பதியும் போதே தகவல் கொடுத்தேன், வந்துவிட்டார், 3 மணிக்கு கோப்பை ஒப்படைத்தேன். தாராபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு முதல் தகவல் அறிக்கை எப்போது அனுப்பினேன் என்றால் பதிந்து 1/2 மணி நேரத்தில் அனுப்பி வைத்தேன். யார் மூலம் அனுப்பி வைத்தேன் என்றால் காவலர் நவநீதகிருஸ்ணன் என்பவர் மூலம் அனுப்பினேன். அன்றைய தினம் அவர் கொடுத்தாரா என்றால் ஞாயிற்று கிழமை என்பதால் நடுவர் இல்லத்தில் ஒப்படைத்தார். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நடுவர் நீதிமன்றத்திற்கு மறுநாள் 18.10.2021 அன்று இரவு 10.15 மணிக்கு

பெறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இன்டிமேசன் வந்தவுடன் அன்றைய தினமே விசாரித்தேனா என்றால் ஆமாம். தாராபுரம் அரசு மருத்துவமனை போனேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் நேரடியாக கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் தலைமைக்காவலர் 1182 திரு.ரமேஸ்குமார் என்பவரை அனுப்பி வைத்தேன். காலை 7 மணிக்கு அனுப்பி வைத்தேன். அவர் மாலை 6 மணிக்கு நிலையம் திரும்பினார். அவர் வாக்குமூலம் எதுவும் பெற்று வரவில்லை என்றால் சரிதான். ஏன் வாக்குமூலம் வாங்கவில்லை என்பதற்கு காரணம் புகார்தாரர் நிலையம் வந்ததால் அவரும் வந்துவிட்டார். நான் அனுப்பிய காவலர் தாராபுரம் அரசு மருத்துவமனை சென்று அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த 1ம் எதிரி மோனீஸ் என்பவரிடம வாக்குமூலம் பெற்றார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் நிகுஎண். 605/2021 பதியப்பட்டது என்றால் ஆமாம். அதே தேதியில் தலைமை காவலர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அசா1ன் கணவர் முருகேசன் என்பவரிடம் வாக்குமூலம் பெறச்சென்று அவர் உறவினர்களோடு கலந்து பேசி வாக்குமூலம் கொடுப்பதாக சொன்னதால் வாக்குமூலம் பெறாமல் வந்தார் என்றால் சரிதான். மறுநாள் கலந்து ஆலோசித்த பின்னிட்டு புகார் கொடுக்கப்பட்டு நிகுஎண்.606/2021 பதியப்பட்டது என்றால் ஆமாம். ஆய்வாளருடன் நான் சம்பவ இடம் போகவில்லை. யார் உடன் சென்றார்கள் என்று கேட்டால் தெரியாது. பார்வைமகஜர் அசாஆ 2 எங்கள் காவல்நிலையத்தில் உள்ள காவலர் எழுதியது என்றால் ஆமாம். மேற்படி அசாஆ.2 ல் உள்ள கையெழுத்தும், புகாரில் உள்ள எழுத்துக்களும் ஒரே நபரால்

எழுதப்பட்டதாக உள்ளது என்றால் ஒரே மாதிரி தான் உள்ளது, ஆனால் ஒருவரே எழுதவில்லை. அசா.1 நிலையம் ஆஜராகி புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும், எங்கள் காவல் நிலையத்தில் இருந்த காவலர் புகாரை தயாரித்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு தயாரிக்கப்பட்டு ஒருநாள் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒப்பம் எஸ்.நாகராஜன்

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி

தாராபுரம்.